# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.157/2018

2025 -ம் ஆண்டு ஜூலை மாதம் 18 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு.R. சீனிவாசன், Bench Clerk(Gr-III) அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 18.07.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. புஷ்பவள்ளி (PW -1) | வயது | : | 65 /2025 |
| க/த பெயர் | : | திரு. ராஜாங்கம் | தொழில் | : | வீட்டு குடித்தனம் |
| முகவரி | | லக்கனாம்பேட்டை | வட்டம் | | மன்னார்குடி |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. பிரதிவாதிக்கு நாங்கள் ஏதேனும் சொத்துக்களை விற்பனை செய்தோமா என்றால் விற்பனை செய்தோம். எத்தனை சதுரடி சொத்து விற்பனை செய்தோம் என்றால் 26 செண்ட் அல்லது குழியா என்று சந்தேகமாக உள்ளது. வாதிகள் எனது மகன்களா என்றால் ஆமாம். எங்களைப்போலவே என் பக்கத்து வீட்டை சேர்ந்தவர்களும் பிரதிவாதியிடம் சொத்துக்களை விற்பனை செய்தார்கள் என்றால் சரிதான்.

2. எனது கணவர் அ பட்டியல் சொத்தை 1987 ல் கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும், ஆனால் கண் பார்வை மங்கலாக உள்ளது. வா.சா.ஆ.6 ஆவணத்தில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் தெரியாது.

3. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்திலும் என்ன எழுதியுள்ளது என்று படித்து பார்த்து சொல்லமுடியாது என்றால் சரிதான். நாங்கள் பிரதிவாதி துரைக்கு விற்பனை செய்த சொத்து பாதையை காண்பித்து விற்பனை செய்தோமா என்றால் இல்லை. நாங்கள் விற்பனை செய்த சொத்தின் வழியாகத்தான் பாதை வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான்.

4. எங்களைப்போலவே பிரதிவாதிக்கு விற்பனை செய்த மற்றவர்களும் பாதை உரிமையை தக்க வைத்து கிரயம் செய்து கொடுத்தார்களா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நாங்கள்

பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த சொத்தை எந்த வருடம் எழுதி கொடுத்தோம் என்றால் எனது மகளின் திருமணத்திற்காக 2007 ல் எழுதி கொடுத்தோம்.

5. நாங்கள் பிரதிவாதிக்கு விற்பனை செய்த 3 வருடத்திற்கும் பாதை தர மாட்டோம் என பிரச்சனை செய்தார் என்றால் 8 வருடத்திற்கு பின்பு பிரச்சனை செய்தார், தேதி மாதம் ஞாபகம் இல்லை. பாதை இருப்பதாக பதிவு செய்யப்பட்ட பத்திரத்திலோ, நிலவியல் அமைப்பிலோ குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது.

6. அ பட்டியல் சொத்து தற்போது யார் உள்ளார்கள் என்றால் நான் மட்டும் தான் உள்ளேன், அருகிலுள்ள சொத்திலும் நான்தான் உள்ளேன். இதற்கு முன்பு அந்த இடத்தில் எத்தனை பேர்கள் உள்ளனர் என்றால் 3 பேர் இருந்தோம், அதில் 2 பேர் அந்த இடத்தை பிரதிவாதியிடம் விற்பனை செய்துவிட்டார்கள்.

7. நாங்கள் மட்டும்தான் அந்த பாதையை பயன்படுத்த வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் எந்த சர்வே எண்ணின் சொத்தில் பாதை கேட்டுள்ளேன் என்றால் தெரியாது.

8. நாங்கள் மட்டும் பாதையை பயன்படுத்த வேண்டும் என கேட்டுவிட்டு அனைவரும் பயன்படுத்தும் பொதுப்பாதை என விளம்புகை வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இரும்பு கதவு போட்டு எத்தனை வருடம் இருக்கும் என்றால் சுமார் 8 வருடம் இருக்கும். எந்த வருடம் என்றால் 2018 இருக்கும். 2018 ல் போட்ட இரும்பு கேட்டானது தற்போது பூட்டப்பட்டு சாவியை பிரதிவாதி வைத்துக் கொண்டார் என்றால் சரிதான்.

9. நிலவியல் இருப்பதாக வழக்குரையில் சொல்லியுள்ளதால் அதன் நீளம், அகலம் எவ்வளவு என்றால் கிழக்கு மேற்கு 37 மீட்டர் நீளமும், வடக்கு தெற்கு 4 மீட்டர் அகலமும் உள்ளது. தற்போது இரும்பு கேட் பூட்டப்பட்டுள்ளதால் அந்த வழியாக செல்லமுடியாமல் வேறு வழியாக செல்கிறோம் என்றால் சரிதான். தற்போது பூட்டுப்போட்ட வழியானது பூட்டுப்போட்ட நிலையில்தான் உள்ளது, நாங்கள் வேறு வழியாக தான் செல்கிறோம் என்றால் சரிதான். நான் கேட்கின்ற பாதையானது அரசாங்கத்திற்கு சொந்தமான இடமா அல்லது பிரதிவாதி துரைக்கு சொந்தமான இடமா என்றால் அரசாங்கத்திற்கு சொந்தமான இடம். கேட் போட்ட இடமும் அரசாங்கத்திற்கு சொந்தமான இடமா என்றால் ஆமாம்.

10. கேட் போட்ட இடத்தை இரண்டு மூன்று முறை சர்வேயரை வைத்து அளந்து பார்த்தோம் என்றால் சரிதான். துரைக்கு சொந்தமான இடத்தில் பாதை கேட்டு வழக்கு தாக்கல் செய்ய வில்லை அரசுக்கு சொந்தமான இடத்தை கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

11. நான் கேட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமானது கேட் பூட்டப்பட்ட இடத்தில் தான் கேட்டுள்ளேன் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் கேட்டுள்ள சொத்து விபரங்கள் அனைத்தும் பிரதிவாதி துரைக்கு சொந்தமான இடம் என்றும் ஆ பட்டியல் சொத்துக்கள்

அனைத்தும் பிரதிவாதிக்கு சொந்தமான சொத்துக்கள் என்றும் எங்களுக்கு ஏதேனும் வசதி உரிமை தேவைப்பட்டால் வசதி உரிமை கோரி தான் வழக்கு தாக்கல் செய்ய முடியுமே தவிர பொதுப்பாதை என்ற விளம்புகை பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. நாங்கள் விற்பனை செய்த சொத்தில் பாதை கேட்கின்ற உரிமை எங்களுக்கு கிடையாது என்றால் சரியல்ல.

12. 8 வருடமாக கேட் பூட்டப்பட்ட நிலையில் நாங்கள் வேறு வழியாக சென்று வருவதாக ஒப்புக்கொண்டுள்ளதால் நாங்கள் கேட்கின்ற பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.07.21 12:01:13 +0530

District Munsif

Mannargudi.